தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 093/2021
நாள். 13.12.2021

திரு. செ.ஆறுமுகம்,
ஜெயங்கொண்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
ஜெயங்கொண்டம் நகராட்சி – எதிர்மனுதாரர்

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அஞ்சல், முதலியார் தெரு, 132-A எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.செ.ஆறுமுகம் என்பவரின் 18.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு 27.05.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 93/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலம் மற்றும் அவர் அளித்த அறிக்கை மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணுமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அஞ்சல், முதலியார் தெரு, 132-A எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.செ.ஆறுமுகம் அவர்கள் “அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சியில் வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு கடந்த நான்கு ஆண்டுகளாக சட்டப்படி வழங்கப்படவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட நபர்களால் நகராட்சியில் உள்ள வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அந்த இணைப்புகளுக்கு உரிய கட்டணம் நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. ஏன் நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என நகராட்சி நிர்வாகத்தில் விசாரித்த பொழுது கம்பூட்டரில் இரசீது போடுவதற்கு உரிய சாப்ட்வேர் இன்ஸ்டால் செய்யப்படவில்லை என தகவல் தெரிவித்தார்கள். இந்த நிலைபாடு கடந்த நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த நிலையில் நகராட்சிக்கு வரும் பெரும் வருவாய் தடுக்கப்பட்டு இந்த பெரும் வருவாய் புதிய இணைப்பு பெற்றவர்களிடம் உள்ளது. மேலும் இவ்வாறு வழங்கப்படும் புதிய குடிநீர் இணைப்புகளுக்குண்டான குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படாத நிலையில் நகராட்சியால் கேட்பு எழுப்பு முடியாமல் உள்ளது. புதிய குடிநீர்

இணைப்பு பெற்ற நபர்களால் மாதா மாதம் செலுத்தப்படவேண்டிய உரிய கட்டணத்தை குடிநீர் இணைப்பு பெற்றவர்களால் நகராட்சியில் செலுத்த முடியாமல் அனைவரும் அவதிப்படுகின்றனர். இந்த நிலைமையினை நகராட்சியில் வந்து கேட்கும் பொழுது நகராட்சி பணியாளர்கள் புதிய இணைப்புகளுக்கு இன்னும் குடிநீர் இணைப்பு கட்டணம் வசூலிக்கப்படாத நிலையில் அவர்களிடம் மாதாந்திர குடிநீர் கட்டணம் கேட்பு எழுப்பப்படவில்லை எனக்கூறி கணினி இயக்குபவர்களால் தகவல் தெரிவித்து வரப்படுகின்றது. புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் தலைப்பு – குடிநீர் இணைப்பு கட்டணம் என்ற தலைப்பில் கடந்த நான்கு ஆண்டுகளாக நகராட்சிக்கு வருவாய் வரவில்லை என்பதை நகராட்சி ஆணையர் மற்றும் மேலாளர் ஆகியோர்களால் கண்டு கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் கணக்கினை முடிக்கும் பொழுது இந்த தலைப்பில் ஏன் வரவு இல்லை என்பதை அவர்கள் ஒருபொழுதும் கண்டு கொள்ளவில்லை. இந்த தலைப்பில் இந்த நகராட்சிக்கு இந்த நான்கு ஆண்டில் மொத்தமாக ரூபாய்.1,34,10,000/- தோரயமான இழப்பீடாக உள்ளது. இதனை நகராட்சி நிர்வாகத்தில் இருப்பவர்கள் கண்டு கொள்ளாமல் உள்ளனர். இந்த தொகையில் கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கலாம். ஆனால் இழப்பீடு மட்டும் மிகவும் உறுதியான ஒன்று என்பது மறுக்க முடியாதது ஆகும்.

மேற்கண்ட இழப்பு தொகையானது நகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்தால் இந்த தொகை கூடுதலாக வாய்ப்பு உள்ள நிலையில், ஜெயங்கொண்டம் நகராட்சி நிர்வாகம் உடனடியாக போர்கால அடிப்படையில் தெருக்கள் – வார்டு வாரியாக தற்போதைய நிலையில் குடிநீர் இணைப்பு உள்ள வீடுகளை கணக்கிட்டு, அவைகளை நகராட்சியில் ஏற்கனவே உள்ள குடிநீர் கட்டணம் வசூல் கேட்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்து கூடுதலாக உள்ள இணைப்புதாரர்களை கண்டறிந்து அவர்களிடமிருந்து தொகையினை வசூலித்து, நகராட்சிக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பினை தவிர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 24.12.2019ல் பதிவு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு பதிவு அஞ்சலை 25.12.2019ல் பெற்றுள்ளார். ஆனால் இந்த கடிதம் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொண்டு 90 நாட்கள் ஆகியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நகராட்சி அலுவலர்களின் அலட்சியத்தினால் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சட்டப்படி வரவேண்டிய வருவாய் நகராட்சி கருவூலத்திற்கு வருவதில் தடை ஏற்பட்டுள்ளது.

எனவே, நகராட்சிக்கு ஏற்படுகின்ற வருவாய் இழப்பினை தடுக்க உரிய ஆணை வழங்கிட வேண்டுமாறும், இந்த நான்கு ஆண்டு காலமாக இந்த வருவாய் இழப்புக்கு நகராட்சி நிர்வாகத்தில் அப்பொழுது பணிபுரிந்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆணை வெளியிடுமாறும் கோரியுள்ளார்.

2. இம்முறைமன்ற நடுவத்தின் 01.03.2021 நாளிட்ட கடிதம் மூலம் 11.03.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு மனுதாரர் திரு.செ.ஆறுமுகம் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு ஆணையிடப்பட்டது.

3. இம்முறைமன்ற நடுவத்தில் 11.03.2021 அன்று மனுதாரர் திரு.செ.ஆறுமுகம் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் "ஜெயங்கொண்டம் நகராட்சியில், நகராட்சி ஊழியர்களால் குடிநீர் இணைப்புகளுக்கு வசூலிக்கப்படும் தொகையை நகராட்சி கணக்கில் செலுத்தாமல் நகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தி வருகின்றனர். நகராட்சி அலுவலர்களின் மெத்தனப்

போக்கினால், நகராட்சிக்கு வரவேண்டிய வருவாய் அரசு கருவூலத்திற்கு செல்ல தடைபடுவதால், மேற்கண்ட வருவாய் இழப்பினை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இது தொடர்பாக எனது 18.05.2020 நாளிட்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதையே எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

11.03.2021 அன்று நடந்த விசாரணையில் ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் ஆஜராகி "இந்நேர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்த விவரங்களை மூன்று வார காலத்திற்குள் தங்கள் முன் சமர்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. இம்முறைமன்றத்தின் 10.08.2021 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டு மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் தனது 19.08.2021 நாளிட்ட கடிதத்தின் மூலமாக 19.04.2021 அன்று முறைமன்ற நடுவத்தில் அளித்த தன்னுடைய அறிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில்

"ஜெயங்கொண்டம் நகராட்சியில் வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 2016-2017 ஆம் ஆண்டில் 251 இணைப்புகள், 2017-18 ஆம் ஆண்டில் 29 இணைப்புகள் மற்றும் 2018-19 ஆம் ஆண்டில் 143 இணைப்புகள் ஆக மொத்தம் 423 இணைப்புகளுக்கு முறையாக விண்ணப்பம் வரப்பெற்று உரிய வைப்புத் தொகை, இணைப்புக் கட்டணம் பெறப்பட்டு நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டு குடிநீர் கட்டண மாதாந்திர கேட்புத் தொகையும் வசூலிக்கப்பட்டு முறையாக கணினி ரசீது (Computerised Bill) வழங்கப்பட்டு வருகிறது".

மேலும் இது தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்படவில்லை.

2016-2017 முதல் 2018-2019 வரையில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் அந்தந்த ஆண்டுகளில் இணைப்புகள் வழங்கப்பட்டவை போக மீதிமுள்ள 244 விண்ணப்பங்களில் 234 எண்ணம் 2019-2020 ஆம் ஆண்டில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்கப்பட்டுவிட்டது. 4 எண்ணம் விண்ணப்பதாரர்கள் தங்கள் வீடுகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுவிட்டதால் இணைப்பு தேவையில்லை என தெரிவித்துள்ளார்கள். மேலும், 6 எண்ணம் விண்ணப்பங்கள் (Double Entry) இரண்டு முறை வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவேடுகளில் முறையாக பதிவு செய்யப்பட்டு, இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை.

குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணமானது உப–விதிகளின்படி (By-Law) வைப்புத் தொகை ரூ.4,000/- மேற்பார்வை கட்டணம் ரூ.875/- எனவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவ2 நாள்.21.09.2009அடிப்படையில் 0-30 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை துண்டிப்பு கட்டணம் ரூ.2,250/- சிமெண்ட் சாலை துண்டிப்பு கட்டணம்

ரூ.2,600/- மற்றும் கருங்கல் சல்லி சாலை துண்டிப்பு கட்டணம் ரூ.1,050/- எனவும், 30-90 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை துண்டிப்பு கட்டணம் ரூ.2,850/- சிமெண்ட் சாலை துண்டிப்பு கட்டணம் ரூ.3,200/- மற்றும் கருங்கல் சல்லி சாலை துண்டிப்பு கட்டணம் ரூ.1650/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படியே செயல்படுத்தப்பட்டு வருகிறது. புகார் மனுவில் சராசரியாக குடிநீர் இணைப்புக்கு ரூ.10,000/- என்று குறிப்பிடப்பட்டிருப்பது முற்றிலும் தவறானது மொத்த கணக்கீடும் தவறான அனுமானத்தில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் தமிழக அரசின் குடிநீர் இணைப்பு இல்லாத அனைவருக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் (Internal Plumbing) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.13277/2018/WS1 நாள்.19.06.2018-ன்படி ரூ.203.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 5889 எண்ணிக்கையில் குடிநீர் இணைப்புகள் வழங்க வேலை உத்தரவு வழங்கப்பட்டு நாளது தேதி வரை 1149 குடிநீர் இணைப்புகள் வழங்கி ரூ.1,18,27,974/- கேட்பு எழுப்பப்பட்டு, ரூ.8,76,765/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கேட்புத் தொகையினை வசூலிக்க தொடர் நடவடிக்கையில் உள்ளது. முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் சேர்த்து தார்சாலைகளுக்கு ரூ.10,486/-ம் மற்றும் சிமெண்ட் சாலைகளுக்கு ரூ.10,950/-ம் 10 தவணைகளில் (Installment Basis) உபயோகிப்பாளர்களிடம் இருந்து வசூல் செய்யப்பட வேண்டும் என்ற திட்டத்தில் இணைப்பு வழங்கப்பட்ட 1149 இணைப்புகளுக்கு தவணை முறையில் முன் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் சேர்த்து வசூல் செய்யப்பட்டு முறையாக கணினி மூலம் பில் வழங்கப்பட்டு வருகிறது.

6. மேலும், மேற்படி புகார் தொடர்பாக தள ஆய்வு மேற்கொள்ள நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களால் நகராட்சிப் பகுதிகளில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு மேற்படி குழு (Team) மூலம் 03.02.2021 அன்று மாதிரி சோதனைகள் (Random Checking) நடத்தப்பட்டு ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டு அனைத்து இணைப்புகளுக்கும் கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்கப்படுவதால் தொடர் இழப்புகள் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் மேலும், மேற்படி புகார் தொடர்பாக உரிய விளக்கம் கோரி இந்நகராட்சியில் 2003 ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை பணிபுரிந்து வரும் குழாய் பொருத்துனர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதன் பேரில் குழாய் பொருத்துனர்கள் நாளது தேதி வரை இந்நகராட்சிப் பகுதிகளில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் ஏதும் இல்லை என விளக்கம் அளித்துள்ளதோடு இது தொடர்பாக தள ஆய்வு மேற்கொள்ளும் பட்சத்தில் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் ஏதும் கண்டறியப்பட்டால் தாங்களே முழுப்பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகவும்" தெரிவித்துள்ளார்கள் என நகராட்சி ஆணையர் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இது தொடர்பான ஆய்வு அறிக்கை, நான்கு ஆண்டுகளுக்கான குடிநீர் விண்ணப்ப பதிவேடு, வைப்பு தொகை பதிவேடு, கேட்பு வசூல், நிலுவை பட்டியல் (DCB) மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

7. மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் விசாரணைக்கு ஆஜரான போது அளித்த அறிக்கைகள், வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு சமர்ப்பித்த அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டன. இதில் கீழ்க்கண்ட விவரங்கள் அறியப்படுகின்றன.

i) ஜெயங்கொண்டம் நகராட்சியில் வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 2016-2017 ஆம் ஆண்டில் 251 இணைப்புகள், 2017-18 ஆம் ஆண்டில் 29 இணைப்புகள் மற்றும் 2018-19 ஆம் ஆண்டில் 143 இணைப்புகள் ஆக மொத்தம் 423 இணைப்புகளுக்கு முறையாக விண்ணப்பம் வரப்பெற்று உரிய வைப்புத் தொகை, இணைப்புக் கட்டணம் பெறப்பட்டு நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டு குடிநீர் கட்டண மாதாந்திர கேட்புத் தொகையும் வசூலிக்கப்பட்டு முறையாக கணினி ரசீது (Computerised Bill) வழங்கப்பட்டு வருவது தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் மூலம் தெரிய வருகிறது.

ii) மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் தமிழக அரசின் குடிநீர் இணைப்பு இல்லாத அனைவருக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் (Internal Plumbing) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.13277/2018/WS1 நாள்.19.06.2018-ன்படி ரூ.203.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 5889 எண்ணிக்கையில் குடிநீர் இணைப்புகள் வழங்க வேலை உத்தரவு வழங்கப்பட்டு நாளது தேதி வரை 1149 குடிநீர் இணைப்புகள் வழங்கி ரூ.1,18,27,974/- கேட்பு எழுப்பப்பட்டு, ரூ.8,76,765/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கேட்புத் தொகையினை வசூலிக்க தொடர் நடவடிக்கையில் உள்ளது.

iii) முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் சேர்த்து தார்சாலைகளுக்கு ரூ.10,486/-ம் மற்றும் சிமெண்ட் சாலைகளுக்கு ரூ.10,950/-ம் 10 தவணைகளில் (Installment Basis) உபயோகிப்பாளர்களிடம் இருந்து வசூல் செய்யப்பட வேண்டும் என்ற திட்டத்தில் இணைப்பு வழங்கப்பட்ட 1149 இணைப்புகளுக்கு தவணை முறையில் முன் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் சேர்த்து வசூல் செய்யப்பட்டு முறையாக கணினி மூலம் பில் வழங்கப்பட்டு வருவதும் ஆவணங்கள் மூலம் தெளிவாகிறது மற்றும் மனுதாரரின் புகார் சம்பந்தமாக ஜெயங்கொண்டம் நகராட்சியில் தள ஆய்வு மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை மூலமாக அனைத்து இணைப்புகளுக்கும் கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதாகவும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதுமில்லை என்று கூறப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

iv) 10.11.2020 நாளிட்ட உள்ளாட்சி தணிக்கை அறிக்கையில், 1138 புதிய குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை, இணைப்புக் கட்டணம் மற்றும் மாதாந்திர கேட்புத் தொகை வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வசூலிக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

v) 2020 ஆம் ஆண்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தணிக்கையில் காட்டப்படவில்லை. ஆகையால் வருவாய் இழப்பினை உறுதி செய்யவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

8. இந்த அறிக்கை புகார்தாரரின் குற்றச்சாட்டுக்களை வலுவாக்குகிறது. எனவே இழப்பிற்க்கும் மற்றும் ஆவணங்களைக் காட்டாமல் செயல்பட்ட அலுவலர்கள் மீதும் விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இதுபோன்ற நிகழ்வுகள் இனி நடக்காமல் இருக்க தெளிவாக ஒரு சுற்றறிக்கையை அனைத்து நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் அனுப்ப நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இழப்புகளைக் கணக்கிட்டு பட்டியலோடு அல்லது அபராதத்தோடு

வசூல் செய்து நகராட்சி வரவில் கொண்டு வருவதை நகராட்சி நிர்வாக இயக்குநர் உறுதி செய்ய கோரப்படுகிறது. இதுப்போன்ற வருவாய் பாதிப்பு மற்றும் இழப்பு நேரக்கூடிய இனங்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (RDMA) சரிவர ஆய்வு செய்யவும் கண்காணிக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. செ.அறுமுகம்,
132-A, முதலியார் தெரு, சின்னவளையம் அஞ்சல்,
ஜெயங்கொண்டம், அரியலூர் - 621 802.
அரியலூர் மாவட்டம்.

2) ஆணையர்,
ஜெயங்கொண்டம் நகராட்சி,
ஜெயங்கொண்டம் - 621 802,
அரியலூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

30/12/21

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

30/12/21